# 16. ஆதாமும் ஏவாளும்



முன்னொரு காலத்தில் மிகவும் அழகான ஒரு தோட்டம் இருந்தது. இந்த உலகத்தில் அதைப் போன்ற வேறு அழகான தோட்டம் ஒன்று எங்குமே இருக்கவில்லை. அந்தத் தோட்டத்தின் நடுவில் ஒரு ஆறு பாய்ந்து ஓடியது. தோட்டம் முழுவதும் மரங்கள் வளர்ந் திருந்தன. பூக்கள் பூத்துக் காய்த்துப் பழுத்திருந்தன. மிருகங்களும், பறவைகளும் தோட்டம் முழுவதிலும் சந்தோசமாக உலாவித் திரிந்தன.



இந்த அழகிய தோட்டத்தைப் பார்த்துக் கெள்ளுவதற்கு ஒரு அம்மாவும் அப்பாவும் இருந்தார் கள். அந்த அப்பாவின் பெயர் ஆதாம். அம்மாவின் பெயர் ஏவாள். அவர்கள் இருவரும் இந்த அழகான தோட்டத்தில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார் கள். இறை தந்தை அவர்கள் இருவரையும் ஆசீர்வதித்தார்.